**In the Court of the Judicial Magistrate No.II,**
**Kovilpatti**

## DEPOSITION OF WITNESS

**C.C.430-2015**

PW2 25.01.2018

- Name Anthonydivahar
- Father's Name
- Village
- Taluk
- Caste
- Calling
- Religion

Age

*நான் குருவிநத்தத்தில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது பெரியப்பா மகன் எதிரியை எனக்குதெரியும். கடந்த 26.05.2015 அன்று காலை சுமார் 7.30மணியளவில் அச்சம்குளத்தில் இருந்து புளியம்பட்டி கோவிலுக்கு லாரியில் சென்றோம். அந்த வாகனத்தை எதிரிதான் ஓட்டினார். நான் லாரியின் பின்பகுதியில் உள்ள கதவு பகுதியில் நான் உட்கார்ந்திருந்தேன். நாங்கள் பயணம்செய்த வாகனம் சொக்கலிங்கபுரம் அருகே சென்றபோது வாகனத்தை வேகமாக ஓட்டியதன் காரணமாக நாங்கள் 7 பேர்கள் வாகனத்தில் இருந்துகீழே விழுந்து அதில் எனக்குதலையில் அடிப்பட்டு காயம் ஏற்பட்டது சிகிச்சைக்காக கடம்பூர் அரசுமருத்துவமனையில் சோத்தார்கள் பின்பு மேல் சிகிச்சைக்காக பாளையங்கோட்டைஅரசு மருத்துவமனைக்கு அழைத்துசென்றார்கள் அங்கு வைத்து 27ம் தேதி காலை வின்சன் என்ற நபர் இறந்துவிட்டார் சம்பவம் பற்றிபோலிசார் விசாரித்தார்கள்*

குறுக்கு விசாரணை இல்லை

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்ட
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து
காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று
ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து
செய்தார்.

*(ஒம்) மு.வீரணன்,*
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி

**In the Court of the Judicial Magistrate No.II,**
**Kovilpatti**

**DEPOSITION OF WITNESS**

**C.C.430-2015**

PW3 25.01.2018

Name Salamonraja
Father's Name
Village
Taluk
Caste
Calling
Religion

Age

*நான் அச்சம்குளத்தில் குடியிருந்து வருகிறேன். அ.சா-1,2எனக்கு தெரியும் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 26.05.2015 அன்று அ.சா1க்கு மொட்டை போடுவதற்காக புளியம்பட்டிக்கு லாரியில் எங்கள் ஊரில் இருந்து சென்றோம். அந்த லாரியில் பின்பக்கத்தில் ஆட்கள் உட்கார்ந்து பயணம் செய்தார்கள்.புளியம்பட்டி செல்லும் ரோட்டில் பாலத்தின் அருகே சென்றபோது அதிகவேமாகவும் அங்கு இருந்து வேகதடை மீது கவனிக்காமல் டிரைவர் வேகமாக ஓட்டியதில் லாரியில் உட்கார்ந்து இருந்த 7பேர்கள் கீழே விழுந்து விட்டோம். சம்பவம்இடத்தில் ஒருநபர் இறந்துவிட்டார் மற்றவர்களுக்கு காயம் ஏற்பட்டது எனக்கு தலையின பின்பகுதியில் மற்றும் முதுகிலும் காயம் ஏற்பட்டது. சிகிச்சைக்காக கடம்பூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள் அதன் பின்பு மேல் சிகிச்சைக்கு பாளையங்கோட்டை அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள் அங்கு வைத்து அ.சா.1 புகார் பெற்றார்கள் சம்பவம் பற்றி போலிசார் என்னை விசாரித்தார்கள்.*

குறுக்கு விசாரணை இல்லை

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்ட
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து
காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று
ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து
செய்தார்.

*(ஒம்) மு.வீரணன்,*
*நீதித்துறை நடுவர் எண்.2,*
*கோவில்பட்டி*